**<u>மேல்முறையீட்டு வழக்கு எண்: 19/2023</u>**

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 25th day of June 2025

**ம.சா.1.**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கில் 2ம் மேல்முறையீட்டாளர் என்றால் சரிதான். இந்த மேல்முறையீடு ராஜலட்சுமி என்பவரால் தாக்கல் செய்யப்பட்டு அவர் இறந்த பின்னர் நான் வாரிசாக சேர்க்கப்பட்டு சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். ராஜலட்சுமிக்கு ஜெயராமன் என்ற மகன் பிறந்து 3 வயது இருக்கும் போது இறந்துவிட்டான் என்றால் சரிதான். ராஜலட்சுமியின் கணவர் ஈஸ்வர் ஐயர் 1941ம் வருடமே காலமாகிவிட்டார் என்றால் சரிதான். ராஜலட்சுமிக்கு நேரடி வாரிசு கிடையாது என்றால் சரிதான். நான் அவரது அக்கா மகன் என்ற முறையில் வாரிசு ஆவேன். நான் தான் ராஜலட்சுமி வாரிசு என்று வாரிசு சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அவ்வாறு வாரிசு சான்றுகள் எதுவும் நான் வாங்கவில்லை. நான் நீதிமன்றம் மூலம் நான் தான் வாரிசு என்று வழக்கு தொடர்ந்து சான்று எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் ராஜலட்சுமி என்னை வாரிசாக விட்டு இறந்துவிட்டார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் ராஜலட்சுமியின் வாரிசு என்பதால் என்னை தரப்பினராக மேல்முறையீட்டில் அனுமதிக்க கோரி நான் மனு செய்து அந்த மனு இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் உண்மையில் ராஜலட்சுமி வாரிசு இல்லை என்றும் அதனால் இந்த வழக்கில் நான் அவசிய தரப்பினர் இல்லை என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்று கொள்ள தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி எதிர்மனுதாரர் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/- S.Senthilbabu,<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |